...தி பொதுமக்கள்
...றக்க விடமாட்
தெரிவித்ததோடு
பெட்டிகளை
வந்து வைக்க
...தி அப்பகுதிக்கு
வாகனங்கள்
என்பதை கண்
...ர்.

கடையை
செய்வது என
...ிகள் குழப்ப

## ...லிட்டி ...வக்கம்

...கோட்டையன்,
...பார் கலந்து
...திரி செயல்
...த்தனர்.
...பெஷாலிட்டி
...ணி நேரமும்
உள்ளது. தரம்
...சம் மதிப்பில்
...கள், ஆண்டு
...சம் மதிப்பில்
அரசு சார்பில்
...ம் அனைத்து
...ண்ட அறுவை
...ரூ.9.25 லட்சம்
...ட உள்ளதாக
...ரிப்பு துறை
...னர்.

---

...துவர். காலை 7 மணியளவில் மலை அடிவாரத்தில் உள்ள தேவஸ்தான திருமண மண்டபத்தில் அன்னதானத்தை அமைச்சர்கள் துவக்கி வைக்கின்றனர். மாலை 5 மணியளவில் மீண்டும் தேர் வடம் பிடித்து இழுக்கப்பட்டு தெற்கு , மேற்கு ராஜ வீதிகள் வழியாக வலம் வந்து குமரன் சதுக்கத்தில் நிறுத்தப்படும் .

25ம் தேதி காலை முதல் மதியம் வரை அக்னி நட்சத்திர அன்னதான வழிபாட்டு மன்றத்தினர் கைலாசநாதர் ஆலயத்தில் வள்ளி , தெய்வானை சமேத முத்துக்குமாரசாமிக்கு மஹாஅபிசேகம் நடத்துகின்றனர் . இரவு 8 மணியளவில் விழாவின் முக்கிய நிகழ்ச்சியான மகாதரிசனம் நடைபெறும் .

---

...ஈடுபட்டார். அப்போது அந்த மர்ம நபர் கத்தி எடுத்து கைலாசத்தின் கழுத்தை அறுத்துவிட்டு தப்பி ஓடினார்.

படுகாயமடைந்த கைலாசம் மீட்கப்பட்டு அந்தியூர் அரசு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி இறந்தார். அந்தியூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து தப்பி ஓடிய மர்ம நபரை தேடி வருகின்றனர்.

---

# பவானி காலிங்கராயன் சிலைக்கு அமைச்சர்கள் மாலை அணிவிப்பு

பவானி.ஜன-20.

பவானி அருகேயுள்ள காலிங்கராயன் அணைக்கட்டு மற்றும் வாய்க்கால் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து விடப்பட்ட தை மாதம் 5 ம் நாள் காலிங்கராயன் தினமாக கடைப்பிடிக்கப்படுகிறது.இந்த நிகழ்ச்சியை விழாவாக கொண்டாடும் வகையில் காலிங்கராயர் சிலைக்கு அமைச்சர்கள் செங்கோட்டையன் , கருப்பணன் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செய்தனர். பல்வேறு சமூக நல அமைப்புகள் அரசியல் கட்சியினர் மற்றும் பொதுமக்கள் அணைக்கட்டில் பொங்கல் வைத்தும், காலிங்கராயர் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தும் மரியாதை செலுத்தினர் .



பவானி அருகே காலிங்கராயன் சிலைக்கு அமைச்சர்கள் செங்கோட்டையன், கருப்பணன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

எம்எல்ஏக்கள் ராமலிங்கம், தென்னரசு, சுப்பிரமணியம், ஈஸ்வரன்,ராஜா (எ)ராஜாகிருஷ்ணன், காலிங்கராயன் வாரிசுகளான(37வது தலை முறை) அருண் காலிங்கராயர், சித்தார்த் காலிங்கராயர் (38வது தலைமுறை), முன்னாள் சிட்கோ வாரியத்தலைவர் சிந்து ரவிச்சந்திரன், ஆவின் தலைவர் காளியப்பன், முன்னாள் துணை மேயர் பழனிச்சாமி, ஒன்றிய அதிமுக செயலாளர் பூவேந்திரகுமார், காலிங்கராயன் பாளையம் கூட்டுறவு கட்டிட சங்கத்தலைவர் மகேஸ்வரன், சித்தோடு கூட்டுறவு வங்கித் தலைவர் முருகேசன் மரியாதை செலுத்தினர்.த.மா.கா. சார்பில் மாவட்ட செயலாளர் விஜயகுமார் தலைமை யில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

காலிங்கராயன்பாளையம் காளிங்கராயன் கொங்கு வேள்ளாளர் சமூக நல அமைப்பு சார்பில் தலைவர் பவிஷ் நல்லசிவம் தலைமையில் காலிங்கராயன் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. பாமக சார்பில் ஈரோடு வடக்கு மாவட்ட செயலாளர் பிரபு தலைமையில் மாலை அணிவித்தனர். ஈரோடு வடக்கு மாவட்ட கொமதேக மாவட்ட செயலாளர் துரைராஜா தலைமையில் அணைக்கட்டு பகுதியில் பொங்கல் வைத்து, படையலிட்டு வழிபாடு நடத்தினர்.

அமைச்சர் செங்கோட்டையன் நிருபர்களிடம் கூறும்போது காலிங்கராயன் நாட்டு மக்களுக்கு அணைக்கட்டு மற்றும் வாய்க்காலை சமுதாய அக்கரையோடு அர்ப்பணித்த தினத்தை அரசு விழாவாக கொண்டாட அமைச்சர்களும், எம்.எல்.ஏ.க்களும் முதல்வருக்கு கோரிக்கை விடுத்துள்ளோம் என்றார்.